(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

இல. 13.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2018 டிசம்பர் 21 வெள்ளிக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு**

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க விடயம் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 27 ஆம் மற்றும் 121(2) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1),— 8 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரையும் இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2019 சனவரி 08 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம்,— 2019 சனவரி 1 ஆம் திகதியன்று தொடங்குகின்றதும், 2019 ஆம் நிதியாண்டுக்கான சேவைகளுக்காக ஏற்பாடு செய்கின்ற ஒதுக்கீட்டுச் சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவடைகின்றதும் அல்லது 2019 ஏப்ரல் 30 ஆந் திகதியன்று முடிவடைகின்றதும், இவற்றுள் எத்திகதி முதலில் நிகழ்கின்றதோ அத்திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின் போது:-

(அ) எழுநூற்றித் தொண்ணூறு பில்லியன் நூற்றியறுபது மில்லியன் அறுநூற்று முப்பத்து நான்கு ஆயிரம் ரூபாவை (ரூபா 790,160,634,000) விஞ்சாத பணத் தொகைகள், (எந்தச் சேவைகள் தொடர்பில் 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தினாலும் குறைநிரப்பு மதிப்பீடுகளினாலும் செலவினத்துக்கான ஏற்பாடு செய்யப்பட்டதோ அந்தச் சேவைகளாக உள்ளவையும்) இத்தீர்மானத்துக்கான சபாபீடத்திலிடப்பட்ட முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவையுமான சேவைகளுக்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டுமென்பதுடன் சொல்லப்பட்ட பணத்தொகைகள், அத்தகைய அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட முறையில், மேற்கூறப்பட்ட காலப்பகுதியின் போது செலவிடப்படலாமென்றும்;

(ஆ) தொளாயிரத்தி எழுபது பில்லியன் முன்னூற்று அறுபத்து மூன்று மில்லியன் நூற்று தொண்ணூற்றியிரண்டு ஆயிரம் ரூபாவை (ரூபா 970,363,192,000) விஞ்சாத பணத் தொகைகள், (திரட்டு நிதியத்துக்குப் பொறுப்பிக்கப்பட வேண்டுமெனச் சட்டங்களினால் அதிகாரமளிக்கப்பட்ட தேவைகளுக்காக ஏற்பாடுசெய்தல் தொடர்பிலான செலவினத்துக்காக) இத் தீர்மானத்துக்கான சபாபீடத்திலிடப்பட்ட இரண்டாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட சேவைகளுக்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டுமென்பதுடன் சொல்லப்பட்ட பணத்தொகைகள் அத்தகைய அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட முறையில், மேற்கூறப்பட்ட காலப்பகுதியின் போது செலவிடப்படலாமென்றும்;

(இ) கூட்டு மொத்தத்தில் ஐந்து பில்லியன் ரூபாவை (ரூபா 5,000,000,000) விஞ்சாத பணத் தொகைகள், இத்தீர்மானத்துக்கான சபாபீடத்திலிடப்பட்ட மூன்றாம் அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட சேவைகளுக்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து முற்பணங்கள் என்ற வகையாகச் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டுமென்பதுடன் மேற்கூறப்பட்ட காலப்பகுதியின் போது அத்தகைய எவையேனும் சேவைகள் தொடர்பில் உறப்பட்ட பற்றுக்கள், அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்டவாறான அதிகபட்ச எல்லைகளை விஞ்சுதலாகாதென்றும்;

(ஈ) தொள்ளாயிரத்தி தொண்ணூறு பில்லியன் ரூபாவை (ரூபா 990,000,000,000) விஞ்சாத பணத்தொகைகள், அரசாங்கத்திற்காகவும் அதன் சார்பிலும், இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி இயைபான சட்டங்களின் நியதிகளின்படி திரட்டப்படவேண்டிய கடன்களாகவுள்ள வரும்படிகளாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவை தொடர்பில் இத்தீர்மானத்திற்கான சபாபீடத்திலிடப்பட்ட அட்டவணைகளில் குறிப்பிடப்பட்ட அத்தகைய சேவைகளை வழங்குவதற்கான செலவினத்துக்குரிய ஏற்பாடும் அத்தகைய கடன்களின் விபரங்களும் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்தில் இடப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கையில் உள்ளடக்கப்படுதலும் வேண்டுமென்றும்

அரசியலமைப்பின் 150 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் நியதிகளின்படி இப் பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

பா. 3/ ’18

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— அரசியலமைப்பின் 48(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அடுத்த கட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளல்,— 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி சனாதிபதி அவர்களால் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டதாலும்;

2018 நவம்பர் 14 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் முதலாம் பந்தி நீக்கப்பட்டு 2018 நவம்பர் 16 ஆம் திகதி கௌரவ மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று சபையில் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் அப்பிரேரணை நிறைவேற்றப்பட்டதாலும்;

அதன்படி, 2018 நவம்பர் 14 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் முதலாம் பந்தி நீக்கப்பட்டதாலும்;

2018 நவம்பர் 16 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பிரேரணையானது பொருண்மை ரீதியாக கௌரவ மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையாகும் என்பதனாலும்;

அரசியலமைப்பின் 48 (2) ஆம் உறுப்புரைக்கமைய அமைச்சரவை கலைந்துள்ளதாலும்;

அதன்படி, அரசியலமைப்பின் 48 (2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதி அவர்களை, அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்குமாறு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.